# இயல் 6.7 - அளவைகள்

பயிற்சி எண் :: 6.7.1.1.C

அளவைகள் - தின வாழ்வின் பொருட்களும் அளவை அலகுகளும்

## அளவைகள் - தின வாழ்வின் பொருட்களும் அளவை அலகுகளும்

| கிலோ லிட்டர் (Kilolitre) (கொள்ளளவின் அளவை அலகு) | கிலோ மீட்டர் (Kilometer) (தூரம்/நீளத்தின் அளவை அலகு) | கிலோ கிராம் (Kilogram) (எடையின் அளவை அலகு) |
|---|---|---|
| ★ மனோவின் வீட்டில் உள்ள தண்ணீர் தொட்டியின் கொள்ளளவு 10 கிலோ லிட்டர் ஆகும்.<br>★ ஒரு ஏக்கர் நெற்பயிருக்கு ஒரு நாள் நீர் பாய்ச்சுவதற்கு 8 கிலோ லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. | ★ உலகத்திலேயே நீளமான நைல் நதி 6,650 கி.மீ நீளமுடையது.<br>★ இமய மலைத்தொடர் 2,300 கி.மீ நீளம் உடையது.<br>★ சீனப்பெருஞ்சுவர் 21,200 கி.மீ நீளம் உடையது.<br>★ கங்கை நதி 11 கி.மீ அகலம் உடையது. | ★ 6-ம் வகுப்பு படிக்கும் மனோவின் எடை 45 கி.கி ஆகும்.<br>★ குமுதா சந்தைக்குச்சென்று 5 கி.கி அரிசி வாங்கிவந்தாள்.<br>★ கதிரவனின் மிதிவண்டி 10 கி.கி எடை உடையது.<br>★ யானை ஏறத்தாழ 4,000 கி.கி. எடை உடையது. |
| **லிட்டர் (Litre) (கொள்ளளவின் அளவை அலகு)** | **மீட்டர் (Meter) (தூரம்/நீளத்தின் அளவை அலகு)** | **கிராம் (Gram) (எடையின் அளவை அலகு)** |
| ★ மதிவாணனின் அன்னை, அவர்கள் வீட்டு உபயோகத்திற்கு, தினமும் 2 லிட்டர் பால் வாங்குவார்.<br>★ அமுதா, அவர்களின் வீட்டு உபயோகத்திற்கு 5 லிட்டர் மண்ணெண்ணை வாங்கி வந்தாள்.<br>★ ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை ₹95/- ஆகும். | ★ முழுக்கை சட்டை தைப்பதற்கு 2 மீட்டர் துணி தேவைப்படும்.<br>★ தென்னை மரம் 25 மீட்டர் உயரம் வளரக்கூடியது.<br>★ கலாவின் பள்ளி விளையாட்டு மைதானம், 60 மீட்டர் நீளமும் 40 மீட்டர் அகலமும் கொண்டது. | ★ 1 கிராம் தங்கத்தின் விலை ₹4,800/-<br>★ அன்பிற்கினியாள் காலில் 50 கிராம் எடையுள்ள வெள்ளி கொலுசு அணிந்திருந்தாள்.<br>★ அறிவழகனின் அன்னை, அவனை கடைக்குச்சென்று சமையலுக்கு 50 கிராம் சீரகம் வாங்கி வரச்சொன்னார். |
| **செண்டி லிட்டர் (Centilitre) (கொள்ளளவின் அளவை அலகு)** | **செண்டி மீட்டர் (Centimeter) (தூரம்/நீளத்தின் அளவை அலகு)** | **செண்டி கிராம் (Centigram) (எடையின் அளவை அலகு)** |
| அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் பொருட்கள் இந்த அலகில் வழங்கப்படுபவை அல்ல. | ★ பச்சை மிளகாய் 10 செண்டி மீட்டர் நீளம் வரை வளரக்கூடியது.<br>★ கிரிக்கட் பந்து 7.2 செண்டி மீட்டர் விட்டம் உடையது.<br>★ நாம் எழுதும் பென்சில் 18 செண்டி மீட்டர் நீளம் உடையது. | அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் பொருட்கள் இந்த அலகில் வழங்கப்படுபவை அல்ல. |
| **மில்லி லிட்டர் (Millilitre) (கொள்ளளவின் அளவை அலகு)** | **மில்லி மீட்டர் (Millimeter) (தூரம்/நீளத்தின் அளவை அலகு)** | **மில்லி கிராம் (Milligram) (எடையின் அளவை அலகு)** |
| ★ நம் உடலுக்கு தினமும் 25 மில்லி லிட்டர் எண்ணை தேவை ஆகும்.<br>★ கவிதா இரவு உறங்கச்செல்வதற்கு முன் 150 மில்லி லிட்டர் பால் காய்ச்சி அருந்துவது வழக்கம். | ★ மனித உடலில் மிகச்சிறிய எலும்பு 3 மில்லி மீட்டர் நீளமுடையது. அது நம் காதில் அமைந்துள்ளது.<br>★ நத்தை ஒரு நிமிடத்திற்கு 60 மில்லி மீட்டர் தூரம் கடக்கும். | ★ எறும்பின் சராசரி எடை 10 மில்லி கிராம் ஆகும்.<br>★ மழைத்துளி சராசரியாக 5 மில்லி கிராம் எடை உடையதாகும். |

## Voice Over coverage points

1. A better articulation on the examples given will help students understand the measures well.

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Friday 26th November, 2021 :: 19:20 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**